

வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி தலைமையில் நேற்று முன்தினம் (09.10.2024) வனப்பாதுகாப்பிற்காக வனத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகள் முன்னேற்றம் குறித்தான மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டம் கிண் டியில் நடைபெற்றது. சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர்.ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், (வனத்துறைத்தலைவர்) சீனிவாஸ் ரா.ரெட்டி, உடன் உள்ளனர்.

### திட்டங்களை தொய்வின்றி செயல்படுத்த வேண்டும்!

# வனப் பரப்பை அதிகரித்திட நடவடிக்கை மேற்கொள்வீர்!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் க.பொன்முடி வலியுறுத்தல்!

சென்னை, அக். 11 - வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி தலைமையில் வனப்பாதுகாப்பிற்காக வனத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகள் முன்னேற்றம் குறித்தான மண்டல அளவிலான ஆய்வுக்கூட்டம் கிண்டியில் நடைபெற்றது.

வனத்துறை அமைச்சர் முனைவர்.க.பொன்முடி தலைமையில் நேற்று முன்தினம் (09.10.2024) கிண்டி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் வனப்பாதுகாப்பிற்காக வனத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகள் முன்னேற்றம் குறித்தான மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், முதுமலை புலிகள் காப்பகம், ஆனைமலை புலிகள் காப்பகம், திண்டுக்கல், தருமபுரி, வேலூர் ஆகிய மண்டல அலுவலர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு வனத்துறை அமைச்சர் அவர்கள், துறை ரீதியாக நடைபெற்று வரும் பணிகள் முன்னேற்றம் குறித்தும், மாவட்ட வாரியாக நடைபெற்று வரும் கோட்ட செயல்பாடுகள் குறித்தும் கேட்டறிந்து பணிகள் அனைத்தும் உரிய காலத்தில் துரிதமாக செய்து முடிக்க ஆலோசனைகள் வழங்கினார்.

2024 - 2025ம் ஆண்டுகளில் வனத்துறை அறிவிப்புகளின் தற்போதைய நிலை பற்றி கேட்டறிந்து அதனை விரைந்து செயல்படுத்த அறிவுரைகள் வழங்கினார். வனத்துறை தொடர்பான பல்வேறு முக்கிய திட்டங்கள் பற்றி கேட்டறிந்தார். தமிழ்நாட்டின்; வனப்பரப்பை அதிகரிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும்படி மண்டல அலுவலர்கள் மற்றும் மாவட்ட வன அலுவலர்களை கேட்டுக்கொண்டார். மேலும் மனித விலங்கு உயிரின மோதல்களை தடுக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். வனத்துறையின் வளர்ச்சி திட்டங்கள் அனைத்தும் தொய்வின்றி செயல்பட அனைத்து நிலை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டுமென்று கூறினார்.

இந்நிகழ்வின் போது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர். ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், (வனத்துறைத்தலைவர்) சீனிவாஸ் ரா.ரெட்டி, மற்றும் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்கள், அரசு உயர்அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைமை அலுவலகத்தில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி நேற்று முன்தினம் (09.10.2024) எரிசக்தித் துறையின் சட்டமன்ற அறிவிப்புகள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார். உடன் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் அனிஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷமகாஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### மின்நிறுத்தம் குறித்து முன்னரே

# மின் நுகர்வோர்க்கு குறுந்தகவலில் தெரிவிக்க வேண்டும்!

## ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வலியுறுத்தல்!

சென்னை, அக்.11 - மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில், நேற்று முன்தினம் (09.10.2024) தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் சட்டமன்ற பேரவையில் எரிசக்தித் துறை சார்பாக அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், இயக்குநர் / பகிர்மானம் (மு.கூ.பொ), திருமதி.கு. இந்திராணி, அனைத்து இயக்குநர்கள் மற்றும் தலைமை அலுவலக தலைமைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் ஆகிய நிறுவனங்களின் சார்பாக சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும், நடப்பு நிதி ஆண்டுக்குள் முடிக்கப்பட வேண்டிய அறிவிப்புகளில் நடைபெற்று வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

அதன்படி, இதுவரை, அறிவிக்கப்பட்ட 108 அறிவிப்புகளில், முக்கிய அறிவிப்புகளான 1,50,000 இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்குதல், 3 புதிய மின் பகிர்மான மண்டலங்கள் அமைத்தல், ஸ்ரீரங்கநாதர் திருக்கோயில், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் திருக்கோயில், கரூர் தான்தோன்றிமலை ஸ்ரீகல்யாண வெங்கடரமண சுவாமி திருக்கோயில் மற்றும் சுசீந்திரம் தாணுமாலயன் திருக்கோயில் ஆகிய கோயில்களின் தேரோடும் வீதிகளில் செல்லும் மேல்நிலை மின் கம்பிகளை புதைவடங்க களாக மாற்றி அமைத்தல் உள்ளிட்ட 34 முக்கிய அறிவிப்புகள் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், 64 அறிவிப்புகளுக்கான பணிகள் பல்வேறு நிலைகளில் துரிதமாக நடைபெற்று வருகிறது. இப்பணிகள் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்ட அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, பணிகளை எடுத்து முடிப்பதற்கு தேவையான தளவாட பொருட்கள் மற்றும் மின் சாதனங்களை விரைந்து கொள்முதல் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டிய அறிவிப்புகளுக்கு காலம் தாழ்த்தாமல் ஒப்பந்தப்புள்ளிகளை கோரியும், அனைத்து பணிகளையும் துரிதமாக மேற்கொண்டு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி அறிவிப்புகளை குறித்த காலத்திற்குள் செயல்பாட்டிற்கு கொண்டு வருமாறும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

மேலும், பராமரிப்பு பணிகளுக்காக திட்டமிடப்பட்ட மின் நிறுத்தங்களின் போது, மின் நிறுத்த நேரம் குறித்து மின் நுகர்வோர்களுக்கு முன்னரே குறுந்தகவல் (SMS) மூலமும், பத்திரிக்கை செய்தி வாயிலாகவும் தகவல் தெரிவிக்கப்படுவதை உறுதி செய்ய அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அறிவுறுத்தினார்.

### திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில்

# ரூ. 48.36 கோடியில் கட்டப்பட்ட பக்தர்கள் தங்கும் விடுதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அக்.14 அன்று திறந்து வைக்கிறார்

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!**



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (09.10.2024) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ. 48.36 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதி. திருக்கோயிலில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்திடும் வகையில் நடைபெற்று திருப்பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை, அக். 11 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர். பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (09.10.2024) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ. 48.36 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதி மற்றும் திருக்கோயிலில் ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் (மாஸ்டர் பிளான்) கீழ் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்திடும் வகையில் நடைபெற்று வரும் திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு தரிசனத்திற்கு வருகின்ற பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. அப்படி வருகை தருகின்ற பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதோடு, பக்தர்கள் இறை தரிசனம் செய்வதற்கு நீண்ட நேரம் காத்திருக்காமல் விரைவாக தரிசனம் மேற்கொள்ளும் வகையில் தேவையான பணிகளை மேற்கொண்டு வருகிறோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற 14ஆம் தேதி அன்று இத்திருக்கோயில் வளாகத்தில் ரூ. 48.36 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதியை திறந்து வைத்து, ரூ.5.81 கோடி மதிப்பீட்டில் தெப்பக்குளம் சீரமைக்கும் பணி, வேத பாடசாலை மற்றும் கருணை இல்லம் கட்டும் பணி, புதிதாக அன்னதானக் கூடம் கட்டும் பணி, சரவணப் பொய்கையில் செயற்கை நீருற்றுகள், வண்ண விளக்குகள், நடைபாதையுடன் கூடிய அழகிய பூங்காவாக புனரமைக்கும் பணி உள்ளிட்ட 4 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார்.

இந்த புதிய பக்தர்கள் தங்கும் விடுதியானது 540 நபர்கள் தங்கும் வகையில் பல்வேறு நவீன வசதிகளுடன் 20 பக்தர்கள் தங்கும் குடில்கள், 100 தங்கும் அறைகள், 28 கூடுதல் படுக்கை அறைகள் (டார்மென்ட்ரி) மற்றும் உணவகத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. கந்த சஷ்டி துவங்குவதற்கு முன்பாக பக்தர்கள் தங்கும் விடுதியை பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என திட்டமிட்டு செயல்படுத்தியுள்ளோம். முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்த அடுத்த நாளிலிருந்து இதற்கான முன்பதிவு தொடங்கப்படும். இதனை நிர்வகிக்கும் பணிகளை திருக்கோயில் நிர்வாகம் அல்லது சுற்றுலாத் துறையின் மூலமாக மேற்கொள்வது குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும். பக்தர்கள் தங்கும் விடுதிக்கு நிர்ணயிக்கப்படும் கட்டணம் தனியார் விடுதியை விட குறைவாகத்தான் கட்டணம் இருக்கும். இது குறித்து கலந்தாலோசித்து பக்தர்களுக்கு அதிக சுமை இல்லாமல் அதே நேரத்தில் பக்தர்கள் தங்கும் விடுதியை நல்ல முறையில் பராமரித்திடும் வகையில் கட்டணங்கள் இருக்கும்.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 2011 - 2012 ஆம் நிதியாண்டில் ஒருங்கிணைந்த திருப்பணிகள் தொடங்கப்பட வேண்டிய சூழல் இருந்தும் அதற்குண்டான முயற்சிகளை அப்போதைய அரசு எடுக்கவில்லை. முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகு இத்திருக்கோயிலுக்கென ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவு (மாஸ்டர் பிளான்) தயார் செய்து, முதலமைச்சர் அவர்களின் அனுமதியை பெற்று தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன்படி, முதல் கட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட 21 பணிகள் மற்றும் இரண்டாவது கட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட 24 பணிகளின் முன்னேற்றத்தினை இன்று ஆய்வு செய்தோம். இந்த பணிகள் அனைத்தும் அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் நிறைவு செய்து குடமுழுக்கு நடத்திட திட்டமிட்டு இருக்கின்றோம். முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாதத்திற்கு ஒரு முறை துறையின் அமைச்சர் என்ற வகையில் நானும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களும், மதிப்பிற்குரிய தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும் அவ்வபோது ஆய்வு செய்து பணிகளைவிரைவுபடுத்திட உள்ளோம்.

**திருப்பணிகள்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு ஆட்சி அமைந்த பிறகு அறுபடை வீடுகள் மற்றும் அறுபடை வீடுகள் அல்லாத முருகன் திருக்கோயில்களில் சுமார் 1,040 கோடி ரூபாய் அளவிற்கு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. பழனி தண்டாயுதபாணி திருக்கோயில், வடபழனி ஆண்டவர் திருக்கோயில் மற்றும் சிறுவாபுரி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகியவற்றுக்கு இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் குட முழுக்கு நடத்தப்பட்டன. திருப்பரங்குன்றம், சுவாமிமலை, பழனி, திருச்செந்தூர், திருத்தணி, வயலூர் போன்ற இடங்களில் அமைந்துள்ள முருகன் திருக்கோயில்கள் பெருந்திட்ட வரைவில் (மாஸ்டர் பிளான்) எடுத்துக்கொள்ளப்பட்டு, திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பணிகள் அனைத்துமே அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் முடித்திட திட்டமிடப்பட்டு இருக்கிறது.

திருச்செந்தூர் கடற்கரையை பொறுத்த அளவில் கடல் அரிப்பு ஒருபுறம் என்றாலும், தண்ணீர் அவ்வப்போது கடல் உள்வாங்குகிற சூழ்நிலையும் இருக்கின்றது. இரண்டையும் ஒப்பிட்டு பார்த்து கடல் அரிப்பு மற்றும் இயற்கை சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தடுத்திடும் வகையிலும், பக்தர்களை பாதுகாப்பு கருதியும் இதற்கான அனைத்து சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்த பின்னரே சுமார் 20 கோடி ரூபாய் செலவில் கடலில் கற்கள் கொட்டுகின்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் 50 சதவீதத்திற்கு மேலான பணிகள் நிறைவுற்றி ருக்கின்றது. அந்த பணிகள் தொடர்ந்து விரைவு படுத்தப்பட்டு வருகின்றன.

**ஆக்கிரமிப்பு நிலங்கள்!**

இந்த அரசு பொறுப்பேற்ற பின்புதான் திருக்கோயில் சொத்து ஆக்கிரமிப்பு தொடர்பாக ஒரு சட்டத் திட்டத்தை கொண்டு வந்தோம். இதற்கு முன்பு புகார்தாரராக ஆணையர் தான் இருந்தார். தற்போது புகார்தாரர்களாக யார் வேண்டுமானாலும் இருக்கலாம் என்று திருத்தத்தை கொண்டு வந்துள்ளோம். ஆகவே திருக்கோயில் ஆக்கிரமிப்பு நிலங்கள் மீது பல குற்ற வழக்குகள் தற்போது பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

திருச்செந்தூர் திருக்கோவில் நிர்வாகத்தின் சார்பில் இராஜகோபுரத்தின் கலசங்களுக்கு தங்கமூலாம் பூசும் பணி முயற்சி மேற்கொள்ளப்படும். கந்த சஷ்டி விழா மற்றும் சூரசம்காரம் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் 10 நாட்களுக்குள் நடத்த இருக்கின்றோம். இத்திருக்கோயிலில் பல்வேறு திருப்பணிகள் நடைபெற்று வரும் வேளையில், பக்தர்களுக்கு சிறு சிறு சிரமங்கள், சங்கடங்கள் இருந்தாலும் கூட அதைப் பொறுத்து கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு தந்திட வேண்டுகிறோம். இப்பணிகள் நிறைவடைந்து குடமுழுக்கு நடைபெறும்போது இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டுகின்ற ஒரு திருக்கோயிலாக திருச்செந்தூர் முருகன் திருக்கோயில் திராவிட மாடல் ஆட்சியில் அமையும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர், க.இளம்பகவத், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி அ.பிரம்மசக்தி, இந்து சமய அறநிலையத்துறை தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, மண்டல இணை ஆணையர் எம்.அன்புமணி, திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமாரன், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆர்.அருள் முருகன் மற்றும் அறங்கா வலர்கள், இணை ஆணையர்/செயல் அலுவலர் எஸ். ஞானசேகரன், திருச்செந்தூர் நகராட்சி துணைத் தலைவர் ஏ.பி. ரமேஷ், வட்டாட்சியர் பாலசுந்தரம் , உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையின் 25வது பொதுக்குழு மற்றும் பொன்விழா மாநாடு 2023, மே திங்கள் 16, 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் சென்னை, கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற்றது.

அவ்வமயம் தொ.மு.ச. பேரவையின் நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் நியமிக்கப்பட்டு அறிவிக்கப்படுகிறார்கள்.

**தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள் பட்டியல்**

| | | |
|---|---|---|
| தலைவர் | : | கி. நடராசன் |
| பொதுச்செயலாளர் | : | மு. சண்முகம் |
| பொருளாளர் | : | கோ.சி. வள்ளுவன் (TNCSC) |

துணைத் தலைவர்கள் : 1) இரா.பொன்னுராம் (அமைப்புசாரா), 2) பி.கிருஷ்ணன் (கிருஷ்ணகிரி) 3) க. சௌந்திரராஜன் (திருவண்ணாமலை) 4) எஸ். பாண்டியன் (குடந்தை) 5) மேலூர் வி.அல்போன்ஸ் (மதுரை) 6) டி.கே.டி.மு. நாகராஜ் (திருப்பூர்)

இணைப் பொதுச்செயலாளர்கள் : 1) பா. மணிமாறன் (EB சென்னை) 2) என்.பாரி (NLC நெய்வேலி) 3) ஜெ. விஜயகுமார் (BSNL சென்னை)

அமைப்புச் செயலாளர்கள்: 1) வி. வேலுசுவாமி (ஆவடி ILO) 2) ஆ. தர்மன் (திருநெல்வேலி)

அலுவலகச் செயலாளர்கள் : 1) ஆ.சீ. அருணகிரி (சென்னை) 2) ப. பன்னீர்செல்வம் (பூவிருந்தவல்லி)

செயலாளர்கள் :
1) ஆர். எத்திராஜ் (திருச்சி)
2) ஆர். பெரியசாமி (கரூர்)
3) ஆர்.சண்முகசுந்தரம் (சென்னை வங்கி)
4) ஜி. பழனி (தருமபுரி)
5) எம்.செல்வராஜ் (நீலகிரி TEA)
6) வி.பி.வினோத்குமார் (வால்பாறை TEA)
7) ஆர். கணேஷ்குமார் (BHEL)
8) திருமதி எஸ். தமிழ்செல்வி (நாமக்கல்)
9) திருமதி தமிழ்செல்வி ஆனந்தன் (திருச்சி)
10) எம். வேலுசாமி (புதுக்கோட்டை)
11) பி. குணசேகரன் (திருச்சி)
12) தங்க ஆனந்தன் (கடலூர்)
13) க. பெரியசாமி (கோவை)
14) வி. மணி (சேலம்)
15) ஜசிஎப் துரைராஜ் (சென்னை AUTO)
16) எம். சண்முகம் (சென்னை)
17) எம். தனசேகரன் (அம்பத்தூர்)
18) திருமதி மகேஸ்வரி முருகன் (மதுரை BSNL)
19) வி. சேகர் (விழுப்புரம்)
20) பி. பன்னீர்செல்வம் (சென்னை SETC)
21) எம். சிவப்பிரகாசம் (மதுரை TASMAC)

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 09.10.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.